**ஏப்ரல் – 16**

**"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ் செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறது போல, நான் அவர்களைக் கடாட்சிப்பேன்."**

**- மல் 3 : 17**

கர்த்தர் தமது தெரிந்து கொள்ளப்பட்டவர்களைத் தேட, நம்மை அனுப்பியிருந்தாரானால், நாம் கூட்டிச் சேர்த்திருக்கிற சிலரை அவர் தகுதியற்றவர்களாகத் தந்திருப்பார். ஏனென்றால், நாம் இருதயத்தை வாசிக்கக் கூடாதவர்களாய் இருக்கிறோம். இந்த எண்ணம் நம்மை எல்லோரிடத்திலும் மிகவும் தாழ்மையுள்ளவர்களும், சாதுவானவர்களும், சாந்த குணமுள்ளவர்களும், கர்த்தரிடத்தில் மிகவும் நம்பிக்கையுள்ளவர்களும், தாவீதை அபிஷேகம் பண்ணுவது சம்பந்தமாக சாமுவேல் கர்த்தரை நோக்கிப் பார்த்தது போல, அவருடைய நடத்துதலை எதிர்பார்க்க மிகவும் விருப்பமுள்ளவர்களுமாக்கும். **-Z ’03, 223 (R 3225)**

* * * * *

தங்களுடைய ஜீவியத்தில் தன்னை முக்கிய விஷயமாகத் தேடுகிறவர்களுக்குக் கர்த்தர் மகிமையான வாக்குத்தத்தங்களை கொடுக்கிறார். அவர்களை அவர் தமது சொந்தமாக்குகிறார். தமது சொந்தக் குமாரருமாக்குகிறார். அந்தப் பெரிய நாளில் இது விசேஷமாக வெளிப்படுத்தப்படும். தயையுள்ள பரிவுடனே அவர்களை நடத்துகிறார். தமது சித்தத்தை செய்வதில் சந்தோஷப்படுகிற தமது பிள்ளைகளை மிகவும் அதிகமான கருணையுடன் யேகோவா தேவன் நடத்துகிறதை விட, வேறு எந்த உலகப்பிரகாரமான பிதாவும் எப்பொழுதாகிலும் தன் பிள்ளைகளை நடத்தினதில்லை. **- P ’36, 48.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 66:16; 56:8; ஏசா 65:13,14; எபி 3:14; சங் 135:4; யோவா 17:6,9,10,24; ஏசா 62:3; சங் 103:8-13; உன்னத 2:16; யோவா 10:27-30; 1கொரி 3:23; 6:20; கலா 5:24; 2தெச 1:7-10; யாக் 19:5; உபா 7:16; தீத்து 2:14; 1பேது 2:9; ரோம 8:32; 2கொரி 6:18; 1யோவா 3:1-3.

**கோபுர வாசிப்பு : Z ’12, 326 (R 5119).**

**வினாக்கள் :** இந்தப் பாடம் இந்த வாரத்தில் என்னை எவ்வாறு பாதித்தது? ஏன்? எந்த நிலைமைகளில்? பலன்கள் எவை?